# திருப்பரங்குன்ற விவகாரம்: முதல்வருக்கு இந்து முன்னணி தபால் அனுப்பும் போராட்டம்



திருப்பரங்குன்றம் மலையில் உள்ள தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டும் என்ற உயர்நீதிமன்ற உத்தரவை அமல்படுத்தக் கோரி பல்லடத்தில் இந்து முன்னணி சார்பில் முதல்வர் சி.ஜோசப் விஜய்க்கு தபால் அனுப்பி வைக்கும் நிகழ்வில் வெள்ளிக்கிழமை பங்கேற்றோர்.

**திருப்பூர், ஜூன் 12:** திருப்பரங்குன்றம் மலையில் உள்ள தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்ற உயர்நீதிமன்ற உத்தரவை அமல்படுத்தக் கோரி தமிழக முதல்வர் சி.ஜோசப் விஜய்க்கு இந்து முன்னணி சார்பில் தபால் அனுப்பும் போராட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

திருப்பூர்-பல்லடம் சாலையில் உள்ள தபால் நிலையத்தில் நடைபெற்ற இந்தப் போராட்டத்துக்கு பிறகு இந்து முன்னணி மாநிலச் செயலாளர் கிஷோர் குமார் கூறியதாவது:

திருப்பரங்குன்றத்தில் உள்ள தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்றலாம் என்று கடந்த ஆண்டு உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. ஆனால் கடந்த திமுக அரசு உயர் நீதிமன்றத்துக்கு மேல்முறையீடு சென்றது. அதன் பிறகும் நீதிபதிகள் தீபம் ஏற்றலாம் என்று தீர்ப்பு வழங்கினர். ஆனால் திமுக அரசு அதை செயல்படுத்தவில்லை.

தற்போது புதிதாக அமைந்துள்ள தவெக அரசின் அமைச்சர் நிர்மல் குமார் திருப்பரங்குன்றம் விஷயத்தில் கடந்த ஆண்டு நடைமுறையே தொடரும் என்று கூறியுள்ளார். இதுவும் நீதிமன்ற அவமதிப்பு ஆகும். எனவே இந்த விவகாரத்தில் நீதிமன்ற உத்தரவை அமல்படுத்தக்கோரி முதல்வருக்கு தமிழகத்தில் உள்ள முருக பக்தர்கள் அனைவரும் மின்னஞ்சல் மூலமாகவும் தபால் மூலமாகவும் கோரிக்கை மனு அனுப்பி வருகின்றனர் என்றார்.

# குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தின விழிப்புணர்வுப் பேரணி

**திருப்பூர், ஜூன் 12:** திருப்பூரில் உலக குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை யொட்டி விழிப்புணர்வுப் பேரணி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் நடைபெற்ற இப்பேரணியை மாவட்ட ஆட்சியர் மனீஷ் கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

முன்னதாக, குழந்தை தொழிலாளர் முறையை அகற்றுவதற்கான விழிப்புணர்வு கையொப்ப இயக்கம் நடைபெற்றதுடன் உறுதிமொழியை துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக் கொண்டனர்.



குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தின விழிப்புணர்வுப் பேரணியை கொடியசைத்து தொடங்கிவைக்கிறார் மாவட்ட ஆட்சியர் மனீஷ்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், தொழிலாளர் நலத் துறை உதவி ஆணையர் காயத்திரி மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### குற்றச்செயல்களில் ஈடுபட்ட இருவருக்கு தண்டனை

# 3 ஆண்டுகள் நன்னடத்தை அலுவலரின் கண்காணிப்பில் இருக்க உத்தரவு

**திருப்பூர், ஜூன் 12:** திருப்பூரில் குற்றச் செயல்களில் ஈடுபட்ட 2 குற்றவாளிகளுக்கு தலா 3 ஆண்டுகள் தண்டனையாக நன்னடத்தை அலுவலரின் கண்காணிப்பில் இருக்க வேண்டுமென நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருப்பூர் வடக்கு காவல் நிலைய எல்லைக்குள்பட்ட துவாரகை நகர் பகுதியில் வசித்து வந்த யுவராஜ் என்பவரின் கைப்பேசி மற்றும் சரக்கு வாகனத்தை கடந்த 2023 ஏப்ரல் 23ஆம் தேதி திருடிச் சென்ற குற்றத்துக்காக ஷியாம் கிறிஸ்டோபர் (24) என்பவர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

இந்த வழக்கில் இறுதி விசாரணை முடிந்து திருப்பூர் மாவட்ட முதலாவது குற்றவியல் நீதிமன்ற நடுவர் செந்தில் ராஜா வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்தார்.

அப்போது, இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட ஷியாம் கிறிஸ்டோபருக்கு 3 ஆண்டுகள் தண்டனையாக நன்னடத்தை அலுவலரின் கண்காணிப்பில் இருக்க வேண்டுமென தீர்ப்பு வழங்கினார்.

**மற்றொரு வழக்கு:** திருப்பூர் வடக்கு காவல் நிலைய எல்லைக்குள்பட்ட பகுதியில் உள்ள ஒரு வீட்டில் நகைகளை திருடிச் சென்ற பெண் ஒருவர் (46) கடந்த 2022 ஜனவரி 19ஆம் தேதி கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

இந்த வழக்கிலும் சம்பந்தப்பட்ட பெண்ணுக்கு 3 ஆண்டுகள் தண்டனையாக நன்னடத்தை அலுவலரின் கண்காணிப்பில் இருக்க வேண்டுமென நீதிமன்ற நடுவர் செந்தில்ராஜா தீர்ப்பு வழங்கினார். இவ்விரு வழக்குகளிலும் அரசுத் தரப்பில் அரசு வழக்குரைஞர் ஹேமா மகேஸ்வரி ஆஜரானார்.

# ஏஐடியூசி தொழிற்சங்கம் சார்பில் கையொப்ப இயக்கம்

**திருப்பூர், ஜூன் 12:** கியூபா மீது விதிக்கப்பட்ட பொருளாதார தடைகளை முடிவுக்கு கொண்டு வர வலியுறுத்தி ஏஐடியூசி தொழிற்சங்கம் சார்பில் திருப்பூரில் கையொப்ப இயக்கம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கியூபா மக்களுக்கு ஆதரவாக ஏஐடியூசி தொழிற்சங்கம் சார்பில் திருப்பூர் குமரன் நினைவகம் முன்பு நடைபெற்ற இந்த நிகழ்ச்சியை, திருப்பூர் மாநகராட்சி பொறுப்பு மேயர் பாலசுப்பிரமணியம் தொடங்கிவைத்தார்.

கியூபா மீது விதிக்கப்பட்ட பொருளாதார மற்றும் நிதி தடைகளை முடிவுக்கு கொண்டுவர வேண்டும், கியூபாவை தீவிரவாதத்தை ஆதரிக்கும் நாடுகள் பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த கையொப்ப இயக்கம் நடத்தப்பட்டது. இதில் ஏராளமானோர் கியூபா மக்களுக்காக ஆதரவாக கையொப்பமிட்டனர்.

# பல்லடத்தில் விவசாயிகள் சங்க உறுப்பினர்களுக்கு பயிற்சி முகாம்



பயிற்சி முகாமில் பங்கேற்ற தலைவர்கள்.

**பல்லடம், ஜூன் 12:** தமிழ்நாடு விவசாயிகள் சங்க உறுப்பினர்களுக்கு பயிற்சி முகாம் பல்லடத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பல்லடத்தில் உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு, கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினர் எஸ்.ஆர். மதுசூதனன் தலைமை வகித்தார். முகாமை மாநிலக் குழு உறுப்பினர் கே.காமராஜ் தொடங்கிவைத்தார்.

'புதிய சூழலில் விவசாய அரங்கில் நமது பணிகள்' என்ற தலைப்பில் மாநில செயற்குழு உறுப்பினரும், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவருமான டி. ரவீந்திரன், 'அமைப்பை கட்ட ஆற்ற வேண்டிய பணிகள்' என்ற தலைப்பில் மாநில துணைத் தலைவர் பி. டில்லிபாபு, 'மாவட்டத்தில் இலக்கும், பணியும்' என்ற தலைப்பில் மாவட்டச் செயலாளர் ஆர்.குமார் ஆகியோர் பேசினர்.

இந்நிகழ்வில் மாவட்ட நிர்வாகிகள் வை.பழனிசாமி, எம்.எம்.வீரப்பன், எஸ்.பரமசிவம், எஸ்.கே.கொளந்தசாமி மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். மாவட்ட பொருளாளர் அ.பாலதண்டபாணி நன்றி கூறினார்.

# வெள்ளக்கோவில் அருகே கருங்கல் கடத்தல்: லாரி பறிமுதல்

**வெள்ளக்கோவில், ஜூன் 12:** வெள்ளக்கோவில் அருகே கருங்கல்கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட லாரியை போலீஸார் பறிமுதல் செய்தனர்.



பறிமுதல் செய்யப்பட்ட லாரி.

வெள்ளக்கோவில் நில வருவாய் ஆய்வாளர் லோகேஷ்குமார், கணபதிபாளையம் அருகே சென்று கொண்டிருந்த போது, அவ்வழியே கருங்கல் பாரம் ஏற்றிக்கொண்டு வந்த ஒரு லாரியைத் தடுத்து நிறுத்தி ஆய்வு செய்தார். அப்போது நடைச்சீட்டு மற்றும் எவ்வித அனுமதியும் இல்லாமல் கல் குவாரியில் இருந்து கருங்கற்கள் விற்பனைக்கு கொண்டு சென்றது தெரியவந்தது.

இதையடுத்து வெள்ளக்கோவில் காவல் நிலையத்துக்கு தகவல் தெரிவித்து, அதன் பேரில் நிலைய உதவி ஆய்வாளர் மணிமுத்து வழக்குப் பதிவு செய்து லாரியை பறிமுதல் செய்தார். தப்பியோடிய ஓட்டுநர், லாரி உரிமையாளர் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

# நேதாஜி ஆயத்த ஆடை பூங்கா, வஞ்சிபாளையத்தில் ஜூன் 16–இல் மின்தடை

**அவிநாசி, ஜூன் 12:** நேதாஜி ஆயத்த ஆடை பூங்கா, வஞ்சிபாளையம் ஆகிய துணை மின் நிலையங்களில் மாதாந்திர பராமரிப்புப் பணிகள் நடைபெற உள்ளதால், கீழ்க்கண்ட பகுதிகளில் ஜூன் 16–ஆம் தேதி (செவ்வாய்க்கிழமை) காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை மின்விநியோகம் இருக்காது என அவிநாசி மின்வாரியத்தினர் தெரிவித்துள்ளனர்.

**மின் தடை ஏற்படும் பகுதிகள்:** நேதாஜி ஆயத்த ஆடை பூங்கா: பச்சாம்பாளையம், பரமசிவம்பாளையம், பள்ளிபாளையம், பெரியாயிபாளையம், காளம்பாளையம், பொங்குபாளையம், பழைய ஊஞ்சப்பாளையம், புது ஊஞ்சபாளையம், குப்பாண்டம்பாளையம், துலுக்கமுத்தூர், நல்லாத்துப்பாளையம், வ.அய்யம்பாளையம், ஆயிக்கவுண்டம்பாளையம், வேலூர், மகாராஜா கல்லூரி, எஸ்.எஸ்.நகர், வீதிக்காடு, முட்டியங்கிணறு, திருமலைநகர், பெ.அய்யம்பாளையம் ஒரு பகுதி, கணக்கம்பாளையம் சிட்கோ.

வஞ்சிபாளையம்: வெங்கமேடு, சாமந்தன்கோட்டை, செம்மாண்டம்பாளையம், கோதபாளையம், காவிலிபாளையம், 15.வேலம்பாளையம், கணியாம்பூண்டி, வலையபாளையம், அனந்தபுரம், செம்மாண்டம்பாளையம் புதூர், முருகம்பாளையம், சோளிபாளையம், ராக்கியாபாளையம்.

# மதுபோதையில் பேருந்து நிலைய கட்டட கண்ணாடியை தலையால் முட்டி உடைத்த தொழிலாளிக்கு சிகிச்சை

**திருப்பூர், ஜூன் 12:** மனைவியுடன் ஏற்பட்ட தகராறில் மது போதையில் பேருந்து நிலைய கட்டட கண்ணாடியை தலையால் முட்டி உடைத்த பனியன் தொழிலாளிக்கு நரம்பு துண்டானதால், அவரின் கை, கால்களை கட்டி 108 ஆம்புலன்ஸ் பணியாளர்கள் சிகிச்சை அளித்தனர்.

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் பாலமேடு பகுதியைச் சேர்ந்தவர் அழகுசுந்தரம் (26). திருப்பூரில் உள்ள ஒரு பனியன் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். இவருக்கும் இவரது மனைவிக்கும் இடையே ஏற்பட்ட தகராறு காரணமாக மன உளைச்சலில் மது அருந்திவிட்டு வெள்ளிக்கிழமை திருப்பூர் மத்திய பேருந்து நிலையம் வந்துள்ளார். போதையில், பேருந்து நிலைய வணிக வளாக கட்டட முகப்பு பக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த கண்ணாடியை தலையால் முட்டி உடைத்துள்ளார். இதில் அழகுசுந்தரம் மூக்கு பகுதியில் நரம்பு துண்டித்து ரத்தப்போக்கு அதிகரித்தது.

அருகில் இருந்தவர்கள் போலீஸார் மற்றும் 108 ஆம்புலன்ஸுக்கு தகவல் அளித்துள்ளனர். விரைந்து வந்த 108 ஆம்புலன்ஸ் பணியாளர்கள் நரம்பு துண்டான காயத்துக்கு முதலுதவி சிகிச்சை அளித்தனர். ஆனால் அழகுசுந்தரம் சிகிச்சைக்கு ஒத்துழைக்காமல் தப்பி ஓடினார். நரம்பு துண்டிக்கப்பட்ட நிலையில் ரத்தப் போக்கு அதிகரித்ததால் அவரது உயிருக்கு ஆபத்து என்பதை அறிந்த 108 ஆம்புலன்ஸ் பணியாளர்கள் பொது மக்கள் மற்றும் போலீஸார் உதவியுடன் அழகுசுந்தரத்தை பிடித்து கை,. கால்களை கட்டி முதலுதவி சிகிச்சை அளித்து பின்னர் திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். குடும்ப பிரச்னையில் பேருந்து நிலைய கண்ணாடியை உடைத்து சிகிச்சைக்கும் மறுத்த இளைஞரால் திருப்பூர் மத்திய பேருந்து நிலையத்தில் பரபரப்பு ஏற்பட்டது.


சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
Central Bank of India
CENTRAL TO YOU SINCE 1911
மண்டல அலுவலகம் : 14/15, வெரைட்டி ஹால் ரோடு, கோவை - 641 001

**மாபெரும் மின்னணு ஏல அறிவிப்பு**
**(E-Auction Notice)**
**( SARFAESI சட்டம் 2002–ன் கீழ்)**

**SARFAESI** சட்டம் **2002**, மற்றும் அதன் பிரிவு 13 (4) ன் கீழ் அதிகாரம் பெற்ற சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி அதிகாரி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சொத்துக்களை கீழ்க்கண்ட தேதிகளில் சுவாதீனம் எடுத்திருந்தார். இதனைத்தொடர்ந்து கீழ்க்கண்ட தேதிகளில் மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் பின்வரும் கடன் கணக்குகளில் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு வர வேண்டிய கடன் நிலுவைத் தொகைகளை வட்டியுடன் வசூலிக்கும் விதமாக பட்டியலில் கண்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்யும் உரிமையுடன் கூடிய கேட்பு அறிவிப்பினை அனுப்பியிருந்தார். ஆனால் கடன்தாரர் / உத்தரவாதம் அளித்தவர் / அடமானம் வைத்தவர் கடன் நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்த தவறியதால், இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரி மேலே குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13 (4) (a) மற்றும் விதி 8 மற்றும் 9 ன் கீழ், தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் வங்கிக்கு வர வேண்டிய நிலுவைத் தொகைகளை வசூல் செய்திட உள்ளார். இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரியின் மூலமாக **https://baanknet.com** என்ற இணையதளத்தின் வாயிலாக மின்னணு ஏல முறையில் விற்பனை நடைபெறும்.

**கிளை : உடுமலைப்பேட்டை கிளை. கடன் கணக்கின் பெயர் : கடன் பெற்றவர் : திருமதி.தமிழ்ச்செல்வி தேவராஜ் - M/s.கிரீன்வே கோக்கோஸ் நிறுவனத்தின் உரிமையாளர்,** 1/52, குரல்குட்டை, உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் – 642154 **கடன் நிலுவைத் தொகை : 11.06.2026 வரையில் ரூ.49,92,331.00 மற்றும் வட்டி, ஏனைய கட்டணங்கள் சேர்த்து. கேட்பு அறிவிப்பு தேதி : 12.08.2024. சுவாதீனம் எடுக்கப்பட்ட தேதி : 07.11.2024. சொத்து விபரம் : சொத்து –1 :** திருப்பூர் பதிவு மாவட்டம், உடுமலைப்பேட்டை சார்பதிவு மாவட்டம், உடுமலைப்பேட்டை தாலுக்கா, சின்னவீரம்பட்டி கிராமம், வெற்றிவேல் நகர் விரிவாக்கம், சைட் எண்.34, பழைய S.F.No.36/1, புதிய சப்டிவிஷன் S.F. No 36/1A, இதில் 1750 சதுரடி விஸ்தீரணம் உள்ள நிலம். **காப்பு விலை : ரூ.18,50,000/-. முன்வைப்புத் தொகை : ரூ.1,85,000/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-.**

**சொத்து 2 :** திருப்பூர் பதிவு மாவட்டம், உடுமலைப்பேட்டை சார்பதிவு மாவட்டம், உடுமலைப்பேட்டை தாலுக்கா, சின்னவீரம்பட்டி கிராமம், சைட் எண்.37 காலி மனையிடம் பழைய S.F.No.31, புதிய S.F. No 31/1A1A, சப்டிவிஷன் பட்டா எண்.333, S.F.No 31/1A1A1 இதில் 2178 சதுரடி விஸ்தீரணம் உள்ள நிலம். **காப்பு விலை : ரூ.22,50,000/-. முன்வைப்புத் தொகை : ரூ.2,25,000/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-. ஏலம் நடைபெறும் தேதி : 29.06.2026. ஏலம் நடைபெறும் நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை 10 நிமிட கால நீட்டிப்புடன் .** சொத்தினை பார்வையிடும் தேதி : **அனைத்து வேலை நாட்களிலும் 22.06.2026 முதல் 26.06.2026 தேதி வரையில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் கிளை மேலாளரின் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம். முன்வைப்புத் தொகை செலுத்த கடைசி தேதி : 29.06.2026 மதியம் 1.00 மணி வரை. சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, உடுமலைப்பேட்டை கிளை : Mob No :8489903035, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் : Mob No : 8489903057**

**நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் : 1.** ஏல விற்பனை ஆன்லைன் மின்னணு ஏலம் / ஏலம் கோருதல் என்ற முறையில் **https://baanknet.com** என்ற இணையதளத்தின் வாயிலாக மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் (ஏலம் முடிவுக்கு வரும் வரையில் 10 நிமிடம் கால நீட்டிப்புடன்) நடைபெறும். **2.** ஏல விண்ணப்பங்களை ஆன்லைன் முறையில் **29.06.2026,** மதியம் **1.00** மணி அளவிலோ அல்லது அதற்கு முன்பாகவோ சமர்ப்பிக்க வேண்டும். **3.**மின்னணு ஏல விற்பனையானது **"எப்படி எங்கு உள்ளனவோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் நடைபெறும். **4.** விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்னணு ஏல நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுதல் மற்றும் ஏல விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் ஆகியவற்றுக்கு முன்பாக **https://baanknet.com** என்ற இணையதளத்திற்கு சென்று முழு விபரங்களுடன் கூடிய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை அறிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **5.** வெற்றிபெற்ற ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர், வருமான வரிச் சட்டம் 1961-ன் உட்பிரிவு 194 IAன் பிரகாரம் ரூ.50.00 லட்சம் மற்றும் அதற்கு மேலான மதிப்பினை உடைய அசையாச் சொத்துக்களின் விற்பனை நடைமுறைகளில் 1% TDS தொகையினை செலுத்த வேண்டும். இத்தொகையினை படிவம் 26QB ல் சலான் (Challan) பூர்த்தி செய்து செலுத்தியதன் பின்னர் அதற்கான TDS சான்றிதழின் அசல் இரசீதினை வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். **6.** மேலும் சொத்து தொடர்பான விபரங்களை அறிய **சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, உடுமலைப்பேட்டை கிளை : Mob No :8489903035, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் : Mob No : 8489903057, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, மண்டல அலுவலகம், கோயம்புத்தூர், மின்னஞ்சல் முகவரி :recvcoimro@centralbank.co.in,** அவர்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். ஏலதாரர் மேற்கண்ட இணையதளத்தில் பதிவு செய்து கொண்ட பின்னர், விருப்பமுள்ள ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர் பின்வரும் ஆவணங்களை ஏல விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் கடைசி தேதிக்கு முன்பாக இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். 1) NEFT/RTGS சலான் ஆகியவற்றின் நகல், 2) PAN கார்டு நகல், 3) அடையாளச் சான்று (KYC) சுய சான்றளிக்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுனர் உரிமம் / பாஸ்போர்ட், 4) முகவரிச் சான்று, மேற்கண்ட ஆவணங்களை பதிவேற்றம் செய்யாவிடில் ஏல விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை அறியவும்.

**தேதி : 11.06.2026**
**இடம் : உடுமலைப்பேட்டை**

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
**சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா**


# பெண்ணிடம் தவறாக நடக்க முயன்ற இளைஞரிடம் போலீஸார் விசாரணை

**திருப்பூர், ஜூன் 12:** திருப்பூரில் பெண்ணிடம் தவறாக நடக்க முயன்ற இளைஞரைப் பிடித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருப்பூர், இளங்கோ நகர் பகுதியில் 55 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் வெள்ளிக்கிழமை இரவு கடைக்கு சென்றுவிட்டு வீடு திரும்பி கொண்டிருந்தார். அப்போது வட மாநிலத்தைச் சேர்ந்த ஒரு இளைஞர், அந்தப் பெண்ணின் கையைப் பிடித்து இழுத்து தவறாக நடக்க முயன்றுள்ளார். இதையடுத்து அந்த நபரை பொதுமக்கள் பிடித்து சரமாரியாகத் தாக்கியதோடு, கை, கால்களை கட்டி வைத்து திருப்பூர் வடக்கு போலீஸாரிடம் ஒப்படைத்தனர். போலீஸார், அந்த நபரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மதுபோதையில் வாகனம் ஓட்டிய 23 பேருக்கு ரூ.2.53 லட்சம் அபராதம்

**திருப்பூர், ஜூன் 12:** மதுபோதையில் வாகனம் ஓட்டியதாக 23 நபர்களுக்கு நீதிமன்றத்தில் ரூ.2.53 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது.

திருப்பூர், கேவிஆர் நகர் போக்குவரத்து காவல் நிலைய எல்லைக்குள்பட்ட பகுதியில் முறையான ஆவணங்கள் இல்லாமலும், மது போதையிலும் வாகனம் ஓட்டிய குற்றத்துக்காக 14 நபர்களுக்கு மோட்டார் வாகன சட்டத்தின்படி திருப்பூர் மாவட்ட நீதிமன்றத்தில் வெள்ளிக்கிழமை ரூ.1 லட்சத்து 48,500 அபராதம் விதிக்கப்பட்டது.

அதேபோல, திருப்பூர், கொங்கு நகர் போக்குவரத்து காவல் நிலைய எல்லைக்குள்பட்ட பகுதியில் முறையான ஆவணங்கள் இல்லாமலும், மது போதையிலுமந் வாகனம் ஓட்டிய குற்றத்துக்காக 9 நபர்களுக்கு திருப்பூர் மாவட்ட நீதிமன்றத்தில் ரூ.1.05 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது.


**ARKA ஆர்கா ஃபின்கேப் லிமிடெட்**
பதிவு அலுவலகம்: 2504, 25வது தளம், ஒன் லோதா ப்ளேஸ், சேனாபதி பாபட் மார்க், லோயர் பரேல், மும்பை - 400013 மஹாராஷ்ட்ரா, மின்னஞ்சல்: customercare@arkaholdings.com

**சுவாதீன (POSSESSION) அறிவிப்பு**
**[2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(2)-ன் படி]**

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் படி, கீழே கையொப்பமிட்டுள்ளவர், **ஆர்கா ஃபின்கேப் லிமிடெட்**-ன் அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால், மேற்படி சட்டம் பிரிவு 13(12)-ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 8-ன் கீழும், தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி பின்வரும் **கடன்தாரர்கள் மற்றும் கூட்டுக்கடன்தாரர்கள்** அவர்களுக்கு கோரிக்கை அறிவிப்புகளை (DEMAND NOTICES) வழங்கி, அந்த அறிவிப்பு பெறப்பட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் அதில் காணும் தொகையை செலுத்துமாறு கோரியிருந்தார்.

ஆனால், கடன்தாரர்கள் மற்றும் கூட்டுக்கடன்தாரர்கள் மேற்படி பாக்கித் தொகையை முழுவதும் செலுத்தத் தவறிவிட்டதால், கடன்தாரர்கள், கூட்டுக்கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்படி சட்டம் 13(4) மற்றும் மேற்படி விதிகள்-விதி-8-ன் கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி பின்வரும் தேதிகளில் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளை கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரபூர்வ அலுவலர் தமது நேரடி சுவாதீனத்தில் (PHYSICAL POSSESSION) எடுத்துக் கொண்டுள்ளார்.

எனவே, கடன்தாரர்கள், கூட்டுக்கடன்தாரர்கள், அடமானதாரர்கள் மற்றும் முக்கியமாக பொதுமக்களுக்கு இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனமாகியுள்ள மேற்படி அடமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ, நடவடிக்கையோ வைத்துக் கொள்ளக் கூடாது. மீறி வைத்துக் கொண்டால், அது, **ஆர்கா ஃபின்கேப் லிமிடெட்**-க்குச் செலுத்த வேண்டிய கடன் பாக்கிக்குக் கட்டுப்பட்டதாகும். கடனுக்கு ஈடான சொத்துகளை மீட்பது தொடர்பான கால அவகாசம் தொடர்பான மேற்படி SARFAESI சட்டம் பிரிவு 13(8)-ன் ஷரத்துகளை கவனத்தில் கொள்ளுமாறு கடன்தாரர்கள், கூட்டுக்கடன்தாரர்கள் மற்றும் அடமானதாரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| கடன்தாரர்கள்/ கூட்டுக்கடன்தாரர்கள் பெயர் | கோரிக்கை அறிவிப்புத் தேதி | சுவாதீனமான தேதி | சுவாதீன அறிவிப்பில் காணும் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1.M/s. J.K. எண்டர்பிரைசஸ் **(கடன்தாரர்கள்)**<br>2.திரு. K. நாயக்கர் சிவகுமார் **(கூட்டுக்கடன்தாரர்கள்)**<br>3.திருமதி. மகேஸ்வரி சிவகுமார் **(கூட்டுக்கடன்தாரர்கள்)**<br>4.திருமதி. மகேஸ்வரி சிவகுமார் **(கூட்டுக்கடன்தாரர்கள்)** | நவம்பர் 17, 2025 | ஜூன் 11, 2026 | ரூ.1,88,03,579.79/- (ரூபாய் ஒரு கோடியே எண்பத்தெட்டு லட்சத்து மூவாயிரத்து ஐந்நூற்று எழுபத்தொன்பது மற்றும் எழுபத்தொன்பது பைசா மட்டும்) |

**சொத்து விவரம்:-**
திருப்பூர் பதிவு மாவட்டம், தொட்டிப்பாளையம் சார்-பதிவு மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், திருப்பூர் சிட்டி , 29-வது வார்டு, கணேஷ் நகர் (பிச்சம்பாளையம் புதூர்), தொட்டிப்பாளையம் கிராமம், ச.எண் 376-ல் உள்ள மொத்தம் 11.30 ஏக்கர் புஞ்சை நிலத்தில், தெற்குப் பகுதியில் 4.53 புஞ்சை ஏக்கர் வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்ட நிலத்தில் பட்டா எண் 3516 / பழைய பட்டா எண் 2059; S.F.No.376/1A1A1B (பழைய S.F.No.376/1A1A1A), இதில் மனை எண் 7 மற்றும் 8, அவற்றின் எல்லைகள் பின்வருமாறு: E.கோவிந்தராஜ் சொத்துக்கு கிழக்கு; 25 அடி அகலமுள்ள வடக்கு-தெற்கு லே-அவுட் சாலைக்கு மேற்கு; 25 அடி அகலமுள்ள கிழக்கு-மேற்கு லே-அவுட் சாலைக்கு வடக்கு; SF.எண் 376-ல் உள்ள நிலத்திற்கு தெற்கு. இதன் மத்தியில் அளவுகள்: கிழக்கு-மேற்காக இருபுறமும் 80 அடி; வடக்கு-தெற்காக இருபுறமும் 65 அடி. மொத்தம் 2600 சதுர அடி, மனை எண் 7 மற்றும் மொத்தம் 2600 சதுர அடி, மனை எண் 8, ஆக மொத்தம் 5200 சதுர அடி (அல்லது 483.09 சதுர மீட்டர்) மற்றும் அதில் உள்ள 5200 சதுர அடி பரப்பளவிலான A.C.C வீட்டு கூரையிட்ட கட்டிடம், அதற்கான மின்சாரம் மற்றும் குடிநீர் வைப்புத்தொகைகள் பொதுவான வழிப்பாதையைப் பயன்படுத்தும் உரிமை மற்றும் இத்துடன் இணைந்த அனைத்து உரிமைகள் மற்றும் சாதனங்கள் உட்பட. கதவு எண் 590/1A, சொத்து வரி மதிப்பீட்டு எண் 032/029/01614, மின் இணைப்பு எண் 03-172-005-721, குடிநீர் வரி இணைப்பு எண் 032/029/01761, பட்டா எண் 3516-ன் (பழைய பட்டா எண் 2059) படி புதிய உட்பிரிவு, சர்வே எண் 376/1A1A1B (பழைய சர்வே எண் 376/1A1A1A).

*மொழிபெயர்ப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின் ஆங்கிலப் பதிப்பே இறுதியானது.

**இடம் : திருப்பூர்**
**நாள் : ஜூன் 13, 2026**

**ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், ஆர்கா ஃபின்கேப் லிமிடெட்**

A Kirloskar Group Company
மேற்படி 'Kirloskar' எனும் அடையாளம் கிர்லோஸ்கர் ப்ரொப்ரைட்டரி லிமிடெட்-க்கு சொந்தமானது. அதை ஆர்கா ஃபின்கேப் லிமிடெட் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.


# வீட்டிலிருந்த இளம்பெண் திடீர் சாவு

**வெள்ளக்கோவில், ஜூன் 12:** வெள்ளக்கோவிலில் வீட்டில் இருந்த இளம்பெண் திடீரென உயிரிழந்தார்.

வெள்ளக்கோவில் சேனாபதிபாளையத்தைச் சேர்ந்தவர் பழனிகுமார். இவரது மனைவி துர்கா (23). இவர்களுக்கு 6 மாத வயதுடைய மகன் உள்ளார்.

துர்காவுக்கு பிரசவ சமயத்தில் இருந்து கர்ப்பப்பையில் பிரச்னை இருந்து வருவதாகத் தெரிகிறது.

இந்நிலையில் துர்கா வியாழக்கிழமை இரவு ஹோட்டலில் இருந்து வாங்கி வந்த சிக்கன் பிரியாணியை சாப்பிட்டுள்ளார். சிறிது நேரத்தில் குமட்டல் ஏற்பட்டு, பின்னர் காலையில் கடும் வாந்தி பேதி ஏற்பட்டுள்ளது. மயக்க நிலையில் இருந்த அவர் காங்கயம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு துர்கா உயிரிழந்தார். இது குறித்த புகாரின்பேரில் வெள்ளக்கோவில் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.